REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 23உ புதன் (6—3—57) ★ ★ வெளியீடு: மாசி 24உ வியாழன் (7—3—57) [இதழ் 230

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(6—3—57 நண்பகல்வரை)

சட்டசபை :	மக்கள் சபை :
2	1

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

சட்டசபை :	மக்கள் சபை :
1,39,109	1,08,028

காங்கிரசார் பணம் கொடுத்து ஓட்டு வாங்கிய காட்சி

சிங்கம்புணரியில் புகைப்படம் பிடிக்கப்பட்டது

ஓட்டுப் பெட்டிகள் உடைக்கப்பட்டிருந்தன

வாக்குகள் எண்ணுவது நிறுத்தப்பட்டுள்ளது

கண்ணதாசன் தொகுதி நிலை

தேர்தல்களில் தில்லுமுல்லுகள் செய்தேனும் வெற்றிதேட வேண்டும் என்ற கெடுநினைப்பு, காங்கிரசாரின் உடன் பிறப்பாகி யிருக்கிறது!

தேர்தல்களில் அவர்கள் செய்கிற திருட்டுத்தனங்கள் அளவிட முடியாதவை என்பது நாடறிந்த உண்மையாகும்.

தோழர் கண்ணதாசன் போட்டியிட்ட திருக்கோஷ்டியூர் தொகுதியில், 92, 93 எண்ணுள்ள வாக்குப் பதிவுச் சாவடிகளிலிருந்த பெட்டிகள், எண்ணிக்கையின்போது உடைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சாவடிகளிலும் இருந்த எதிர்க்கட்சியினரின் (தி. மு. கழகம், கம்யூனிஸ்டு) ஓட்டுப்பெட்டிகள் உடைக்கப்பட்டிருந்திருக்கின்றன.

வேறு சில பெட்டிகள், சீல் வைக்கப்படாமலிருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும் 43, 44-ம் எண்ணுள்ள வாக்குப் பதிவுச் சாவடிகளைச் சேர்ந்த பெட்டிகளில் வாக்குச் சீட்டுகள் மாறி மாறிக்கிடந்திருக்கின்றன.

மேலும் கோட்டையிருப்பம் கிராமத்திற்கென எண் இடப்பட்டிருந்த வாக்குச் சீட்டுகள் திருப்பத்தூர் நகரத்தில் பதிவாகியுள்ளனவாம்.

புகார்

எனவே, இந்த தில்லு முல்லுகளையும் ஒழுங்கீனங்களையும் காரணமாகக் காட்டி, தி. மு. கழக அபேட்சகர் கண்ணதாசன் அவர்களும், கம்யூனிஸ்டு, சுயேச்சை அபேட்சகர்களும் திருப்பத்தூர் வட்டத் தேர்தல் அதிகாரியிடம் புகார் செய்தனர்.

வாக்கு எண்ணுவது நின்றது

புகாரின் பேரில் தேர்தல் அதிகாரி தொடர்ந்து வாக்குகளை எண்ணுவதை நிறுத்தி வைத்துவிட்டு, மேற்கொண்டு என்ன செய்வது என்பதை டில்லியில் உள்ள பிரதம தேர்தல் அதிகாரியிடம் 'டெலிபோன்' மூலம் கேட்டிருக்கிறார் என்றும் அவரது தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் தெரிகிறது.

பணம் தந்து......!

பணம் தந்து காங்கிரசார், சிங்கம்புணரி நகரில் ஓட்டுப் பெற்றிருக்கின்றனராம்.

புகைப் படம்

இந்த இழிசெயலை, நமது தி. மு. கழகத் தோழர்கள் புகைப் படம் பிடித்து வைத்திருக்கிறார்கள்.

கண்டன ஊர்வலம்

தில்லு முல்லுகள் காரணமாக வாக்கு எண்ணுவது நிறுத்தப்பட்டதும் தி. மு. க., கம்யூனிஸ்டு, சுயேச்சை அபேட்சகர்கள், கூட்டாக திருப்பத்தூரில் கண்டன ஊர்வலம் ஒன்றும் நடத்தியுள்ளனர். அவர்கள், இந்தத் தேர்தல் செல்லாது என்று தீர்ப்பளிக்கப்பட்டு மறு தேர்தல் நடைபெற வேண்டுமென விரும்புகின்றனர் எனத் தெரியவருகிறது.

★★★★★★★★★★★★★★★★★

பெற்ற தாயை வெள்ளாட்டியாக்கும் ஏக இந்தியப் பித்தர்களுக்கா உங்கள் ஓட்டு?

★★★★★★★★★★★★★★★★★

வெற்றிகண்ட கழக வீரர்கள்

மக்கள் சபை :

1. தர்மலிங்கம் (திருவண்ணமலை)

சட்டசபை:

1. ஏ. கோவிந்தசாமி (வளவனூர்)
2. களம்பூர் அண்ணமலை (போளூர்)

சுதந்திர கண தோற்றம்

லண்டன், மார்ச் 6—

கடந்த இரு நூற்றாண்டுக்காலமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிடிப்பின்கீழ் இருந்த கோல்ட் கோஸ்ட், இன்று சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டு 'சுதந்திர கண' நாடாகத் திகழ்கிறது.

இதனையொட்டி, அந்நாடு முழுமையிலும் பறந்துகொண்டிருந்த பிரிட்டிஷ் கொடியான 'யூனியன் ஜாக்' இறக்கப்பட்டு, அவைகளுக்குப் பதிலாகப் புதிய கண சுதந்திர நாட்டின் சிவப்பு, பச்சை, மஞ்சள் நிறக் கொடிகள் உயர்த்தப்பட்டுள்ளன.

இந்தச் சுதந்திர நாட்டின் முதல் பிரதமராக குவாமி என். க்ருமா என்பார் இருப்பார். இவர் தான் காமன்வெல்த் நாட்டுப் பிரதமர்களில் மிக இளமை வயதுடையவராவார். இவர், கடந்த 1950-ல், உடனடியாகச் சுதந்திர சர்க்கார் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினதையொட்டிக் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவராவர்.

இதனையொட்டி இங்கு நடைபெற்ற அரசாங்க நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசும்போது, அமைதியான ஜனநாயக முறைகளில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் காமன்வெல்த்தின் கூட்டுறவுடன் பரிகாரங்கள் காணப்படும் என்றும் கூறினாராம்.

சுதந்திர கணவுக்கும் மற்ற உலக நாடுகளுக்குமிடையேயுள்ள கூட்டுறவை மேலும் விரிவுபடுத்துவதும் தனது சர்க்காரின் ஒரு கொள்கை என்றும் அவர் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்க உதவி

சுதந்திர கணவின் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவையான சகலவித தொழில் நுட்ப உதவிகளையும் அமெரிக்கா தரும் என்று அமெரிக்க உதவித் தலைவர் நிக்சன் கூறியிருக்கிறார்.

பொதுச்செயலாளர் தொகுதியில் தேர்தல்

வாக்குப் பதிவை மந்தமாக்க காங்கிரசார் முயற்சி!

இழிசெயல்களுக்குக் காமராசர் தலைமை தாங்குகிறாராம்!

(டிரங் செய்தி)

சேலம், மார்ச் 6—

நமது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தொகுதியில் இன்று வாக்குப் பதிவு துவங்கியுள்ளது.

காலை முதல் சேலம் நகரத்திலும் தொகுதியின் இதர பகுதிகளிலும் வாக்குப் பதிவு நண்பகல் 12-மணி வரையில் நம்பிக்கையூட்டத் தக்கவகையில் வெகு நன்றாகவே நடைபெற்றிருக்கிறது.

கடந்த சில நாட்களாகவே கழகத்திற்கும், பொதுச் செயலாளருக்கும் பெருகிவரும் ஆதரவு கண்ட மாற்றுக் கட்சியினர், காங்கிரசார் மிகக் கவலைகொண்ட நிலையில் வாக்குப் பதிவு சுறு சுறுப்பாக நடைபெறாது தடுப்பதையே தங்கள் வேலையாக்கிக்கொண்டிருக்கின்றனர்

முதன் மந்திரி காமராசரும், நிதி மந்திரி சுப்பிரமணியமும் நேற்று மாலை சேலம்வந்து, முகாமிட்டிருக்கின்றனர்.

நேற்று மாலை முதல் நகரில், வெள்ளிப்பணம் வாரி இறைக்கப்படுகின்றதாம் காங்கிரசாரால்!

வாக்காளரை சாவடிக்குச் செல்லவிடாமல் தடுப்பதற்காகச் சகல கீழ்த்தரமான —சட்ட விரோதமான வழிகளையும் காங்கிரசார் காமராசர், சுப்பிரமணியம் தலைமையில் மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கண்காணிக்கின்றனர்

அண்ணா அவர்களும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் சேலம் வந்து வாக்குப் பதிவு நடைபெறுவதைக் கண்காணித்து வருகின்றனர். வேலை செய்யும் தோழர்களுக்கு அண்ணாவும் சம்பத்தும் வந்திருப்பது, மேலும் உற்சாகம் தந்துள்ளது.

செல்லாத வாக்குகள்!

பெங்களூர், மார்ச் 6—

இதுவரை நடைபெற்ற தேர்தல்களில், பெங்களூரில்தான் அதிகப்படியான அளவுக்கு செல்லுபடியாகாத வாக்குகள் பதிவாகியிருக்கின்றன.

பெங்களூர் தென் தொகுதியில் வாக்காளர் தொகை 83,089 ஆகும்.

இங்கு போட்டியிட்ட இரண்டு காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒரு சுயேச்சையுமாகச் சேர்ந்து மொத்தம் 12,000 வாக்குகளே பெற்றிருக்கின்றனர்.

இது நீங்கலாக மொத்தம் செல்லுபடியாகாத வாக்குகளின் எண்ணிக்கை 7,848 என்று அறிவிக்கப்படுகிறது.

திருவண்ணமலை மக்கள் சபை தொகுதியில் தி.மு.க.வெற்றி விவரம்

திருவண்ணமலை மக்கள் சபைத் தொகுதியில் போட்டியிட்ட தி. மு. க. அபேட்சகர் தோழர் தருமலிங்கம் அவர்கள், தம்மை எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகரைவிட 10,239 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

தர்மலிங்கம்	(தி.மு.க.)	84,309
நீலகண்டன்	(கா.)	74,070
தாயுமானவன்	(சுயே)	25,145
என். முனுசாமி	(சுயே)	18,436
செல்லாதவை		147

மறு வாக்குப் பதிவு நடைபெற உத்திரவு

போபால், மார்ச் 4—

கடந்த திங்கள் 25-ந் தேதி நடைபெற்ற வாக்குப் பதிவின் போது சிவபுரி மாவட்டத்தில் உள்ள பிச்சோர் தொகுதியில் ஒரு வாக்குப் பதிவு நிலையத்தில் வாக்குப் பதிவுப் பெட்டி பழுதடைந்து இருந்ததால் மீண்டும் அந்தப் பகுதியில் மார்ச் 8-ந் தேதி வாக்குப் பதிவு நடைபெற தேர்தல் குழு உத்திரவு பிறப்பித்திருக்கிறதாம்!

★★★★★★★★★★★★★★★★★

தாயக விடுதலைக்காகப் போராடும் தி. மு. க. அபேட்சகர்களுக்கே உங்கள் ஓட்டு!

★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 6—3—57 புதன்

மகத்தான வெற்றி!

தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொதுத் தேர்தல்களின் முடிவுகள் சிறிது சிறிதாக அறிவிக்கப்பட்டு வருகின்றன. நாட்டு மக்களும் டெல்லிப் பெரியவர்களும் தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவுகளை ஆர்வத்தோடும் கவலையோடும் எதிர்பார்த்து வருகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்து, சிறிது சிறிதாக அறிவிக்கப்பட்டுவரும் முடிவுகள், கழக அபேட்சகர்களுக்குத் தரும் வெற்றிக்கோ தோல்விக்கோ அதிகமான முக்கியத்துவம் தராமல்—எத்தனை ஆயிரம் மக்கள் நமது கழகத்தின் விடுதலை இலட்சியத்தையும் முற்போக்கான கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்; எத்தனை ஆயிரம் மக்களை நம்மால் சந்திக்க முடிந்திருக்கிறது; எத்தனை ஆயிரம் மக்கள் காங்கிரசின் எதேச்சாதிகார ஆட்சியினால் எதிர்காலத்திற்கு ஏற்படக்கூடிய அபாயங்களை உணரச்செய்ய முடிந்தது; எத்தனை ஆயிரம் மக்களை ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டியதின் அவசியத்தை ஏற்கச் செய்ய முடிந்

ற விரிவான பயன
ஆராய்ச்சிக்குத்தான்
முக்கியத்துவம் தருவ
ருக்கிறது.
விட முன்னேற்றக் கழ
அரசியலில் குழந்தைக்
என்றும், 'இளங்கன்று
பாது என்பதைப்போல
என்றும், இன்னும் பல
வும் மாற்றுக் கட்சி நண்
ல் வர்ணிக்கப்பட்டது.
ப்பட்ட வர்ணனைகளி
'இவர்கள் ஏன் 150
ளில் அகலக் கால் வைக்
ர் தெரியுமா?' என்ற
களை ஆராய்ந்து ஆரூ
யும் கூறினர் சில 'அகில
'க்கள்! கேலி பேசி
, 'ஓரிரு இடங்களில்
வெற்றி பெறமாட்டார்
ன்று ஆரூடம் தந்த
நரிசி'களும் வெட்கித்
னியும்வண்ணம், தேர்
முடிவுகள் கழகத்திற்கு
மைத் தந்து வருகின்
அகில இந்தியக்
ளும் தங்கள் தங்களின்
களைவிட, கழகத்தின்
பிக்காகவே தங்களின்
ஆற்றலையும் ஒன்று
, கழகத்தை எதிர்த்துக்
டிருக்கின்றன; என்று
னநாயகம்' என்ற அரசு
ில் உதட்டளவில் நம்
தெரிவித்து அதன்
பலன் பெற்றுக்கொண்டு
அந்த அரசுமுறைக்கே
ாண்டும் சில கொள்கைக்
வாதிகளைப் போலன்றி,
ாடுகள் உடையதாயினும்
யகம்'தான் இன்றைய
மக்களுக்கு சகல நன்
யும் பெற்றுத் தரத்தக்க
ான அரசு முறை என்
அசைக்கவொண்ணா
ர்வமான நம்பிக்கை
—து தி. மு. கழகம்
ால்தான், வெற்றி தோல்
பற்றிக் கவலையின்றி

ஜனநாயகத்தின் குரல் வளையை நெரித்துக் கொண்டிருக்கும் காங்கிரசின் எதேச்சாதிகாரப் போக்கை தடுத்து நிறுத்துவதற்காக சுமார் மூன்றில் இரு பங்கு இடங்களில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடும் துணிவைப் பெற்றது. தோல்விகள், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது கசப்பானவையாக இருக்கலாம்; ஆனால் இந்தத் தோல்விகளை நமக்குத் தேடித் தருவதற்காக மாற்றார்—எல்லா அகில இந்தியக் கட்சிகளும் மற்றவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எத்தனை பிரம்மாண்டமானவை என்பதை எண்ணிப்பார்த்தால் கழகம் தனது தோல்வியையே வெற்றியாகக் கருதி மகிழலாம். எல்லாக் கட்சிக்காரர்களுடைய மூர்க்கத்தனமான எதிர்ப்பிற்குப் பிறகும், எதிர்த்தவர்கள் அனைவரையும் தோற்கடித்துவிட்டு கழக அபேட்சகர்கள் பெற்றுள்ள வெற்றிமட்டும்தான் கழகத்திற்குக் கிடைக்கும் வெற்றி என்பதல்ல; நாம், மக்களிடை தோற்றுவித்திருக்கும் ஜனநாயக உணர்வும் கழகத்தின் இலட்சியத்தற்கும் கொள்கைகளுக்கும் போட்டியிட்ட எல்லாத் தொகுதி வாக்காளரிலும் பல்லாயிரக் கணக்கானவர்களின் சம்மதத்தைப் பெற்றிருப்பதும் கழகம் பெருமையோடும் பூரிப்போடும் அனுபவிக்கும் வெற்றிகள் அல்லவா?

மக்களின் அறியாமையை முதலீடாக்கி, அவர்களது கணநேரத் தேவைகளைப் பூர்த்தி செய்தும், அவர்கள் சுலபத்தில் வயப்பட்டுவிடும் உணர்ச்சிகளைத் தூண்டியும், அவர்களை எளிதில் கவரக்கூடிய உறுதிமொழிகளைத் தந்தும் வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் 'அகில இந்திய'க்களைப் போலன்றி திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்கு முதலில் அறிவுத் தெளிவையூட்டி அந்த அறிவு வெளிச்சத்தில் நாட்டு நிலைகளை நிறுத்தி வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் பிடிப்பிலிருந்து நாடு விடுதலை பெற்றாலன்றி வாழ்வுபெற முடியாது என்ற உண்மையை உணரச் செய்து ஏகஇந்திய ஏகாதிபத்தியத்தின் தமிழ்நாட்டுப் பிற்போக்கு—முற்போக்குக் கங்காணிகளது வெறிகொண்ட இழிதன்மையான எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல் கஷ்டநஷ்டங்களை ஏற்றுக்கொண்டு முன் அனுபவம் ஏதுமின்றித் தேர்தலில் ஈடுபட்டு, பல்லாயிரக்கணக்கான வாக்குகளைப் பெறுவதும், வெற்றிகளை ஈட்டுவதும் எத்தனை கடினமானவை? எத்தனை மகத்தான வெற்றிகள் அவை?

இந்த வெற்றிகளைப் பெற்ற கழகத் தோழர்களையும், வெற்றியைத் தேடித் தந்த வாக்காளர் பெருமக்களையும் நாம், நன்றி நிறை உள்ளத்தால் வாழ்த்துகிறோம்—பாராட்டுகிறோம்.

'முதல் ரவுண்டுச் சண்டை'யே இன்னும் முடியவில்லை; அதிலேயே நாம் பெற்றுள்ள பெருமைக்குரிய வெற்றி, நல்ல நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது.

தோழர்களே, விரைவீர்! எஞ்சிய தொகுதிகளில் தேர்தல் வேலை செய்யும் கழகக் காளையரே! மகத்தான வெற்றியைத் தேடித்தரப் பாடுபடுங்கள்! உங்களின் உண்மையான **உழைப்பு, நிச்சயம் வெல்லும்!**

உருட்டலும் மிரட்டலும்!

'பயப்படமாட்டோம்'

என்கிறார் நேரு பண்டிதர்

கான்பூர், மார்ச் 4—

"பாகிஸ்தான் அல்லது மற்றெந்த உலக நாடுகளின் பயமுறுத்தல்களுக்கோ உருட்டல் மிரட்டல்களுக்கோ பணிந்து, இந்தியா தனது காஷ்மீர் கொள்கையை மாற்றியமைத்துவிடப் போவதில்லை; இந்தியாவின் இக்கொள்கையை மாற்றச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு பிறநாட்டு நடவடிக்கையையும் இந்தியா அனுமதிக்காது,"

என்று, நேரு பண்டிதர் இங்கு நடைபெற்ற ஒரு தேர்தல் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

'பாகிஸ்தானை பாக்தாத் ஒப்பந்த நாடுகள் தங்கள் வலையில் இழுத்துக்கொண்டு இந்தியாவைத் தவறான வழிகளில் திருப்பிவிட நினைக்கின்றன' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'ஐ. நா. தலைவர் குன்ஜார் ஜாரிங் இங்கு வர இருக்கிறார்; அவரை முழுமனதுடன் வரவேற்கிறோம். ஆனால் பயமுறுத்தல்களுக்கெல்லாம் இந்தியா அஞ்சி, தனது காஷ்மீர் கொள்கைகளை விட்டுவிடாது' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐ. நா. சபையில் கொண்டு வரப்பட்ட அமெரிக்கா-பிரிட்டன் தீர்மானம் பற்றி அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவின் பலமான ஆட்சேபணைகளையும் கூடப் பொருட்படுத்தாது இந்நாடுகள் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுப் பெரிதும் பாடுபட்டதுடன், இந்தியாவிற்கு ஐ. நா. படை அனுப்ப வேண்டுமென்ற தீர்மானத்திற்கும் ஆதரவு தந்தன. இவைகளெல்லாம்தான், இந்தியாவை, தனது சுதந்திர அயல் நாட்டுக் கொள்கைகளிலிருந்து வழி திருப்பிவிட மேற்கொள்ளப்படும் 'முயற்சிகள்'."

இறுதியில், 'உலகிலேயே உள்ள மிக மிகப் பெரிய சக்தியின் தூண்டுதலாலும்கூட, நான், இந்தியாவின் மதிப்பையும், சுதந்திரத்தையும் விற்றுவிடமாட்டேன்' என்று கூறினாராம்.

தோல்வியுற்றபின் பதவியிலிருப்பதா?

சனநாயகக் கோட்பாட்டிற்கு முறையான செய்கையா?

கான்பூர், மார்ச் 3—

உத்திரப்பிரதேச அரசாங்கத்தின் திட்ட அமைச்சர் குப்தாவை எதிர்த்து திருலோக் சிங் என்பவர் வெற்றி பெற்றுள்ளார்.

தோல்வி கண்டபின்னர் பதவியில் இருக்க விரும்பாத திட்ட அமைச்சர் இராஜினாமா செய்ததை, உ. பி. கவர்னர் முன்ஷி ஏற்றுக்கொள்ள மறுத்து, புதிய அமைச்சரவை ஏற்படும்வரை பதவியில் நீடித்து இருக்குமாறு வேண்டிக்கொண்டாராம்.

'இது, நல்ல சனநாயக கோட்பாட்டிற்கு முறையானதல்ல,' என்று அனைத்திந்திய பி. சோ. கட்சி செயலாளர் கருத்தறிவித்துள்ளார்.

தி. மு. கழகமே நல்ல எதிர்க்கட்சியாக முடியும்

சென்னை மந்திரிகள் டில்லியின் சேவகர்களாயிருக்கும் நிலை மாற வேண்டும்

டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) கருத்து

"அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முடிவுகள், மக்கள்மீது திணிக்கப்படுகின்றன!

"சென்னையில் உள்ள காங்கிரஸ் மந்திரிகள், டெல்லியில் உள்ளோரின் கூப்பிட்ட குரலுக்கு ஓடிச்செல்லும் சேவகர்களாகத்தான் இருக்கின்றனர்! மிகச் சிறிய விவகாரங்களுக்குக்கூட டெல்லிக்குக் காவடி எடுக்க வேண்டியவர்களாயுள்ளனர்!

"சென்னைக்கு எந்தவித சுதந்திரமும் இல்லை; இதனால் இங்குள்ள மந்திரிகள் டெல்லிப்பட்டணத்திற்கு விமானமூலம் பிரயாணம் செய்து வருவதின்மூலம், ஏழையின் வரிப்பணம்தான் பாழாகி வருகிறது.

"இந்தநிலை மாறியாகவேண்டும். இதற்கு வலுவுள்ள ஆரோக்கியமான எதிர்க்கட்சி ஒன்று அவசியம் வேண்டும்.

"இன்றைய நிலையில் தமிழ்நாட்டில், அப்படி ஒரு எதிர்க்கட்சியாக அமைய தி. மு. கழகமே தகுதியுடையது என்று கருதுகிறேன்"

என்று டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) அவர்கள், காஞ்சியில் நடைபெற்ற தேர்தல்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், 'காங்கிரஸ்தான் இந்த நாட்டில், ஒரு ஜனநாயக இயக்கம் என்று கூறுகிறார்கள்; ஆனால், கடந்த 10 ஆண்டுக் கால ஆட்சியைக் கூர்ந்து நோக்கினால், காங்கிரஸ் ஒரு சர்வாதிகார இயக்கம் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்' என்றும் கூறினார்.

மதுரையில் மாபெரும் ஊர்வலம்

எஸ். எஸ். ராசேந்திரன் தலைமையில் 50 ஆயிரம் பேர் அணிவகுத்தனர்

மதுரை, மார்ச் 2—

மதுரை மத்தியத் தொகுதிக் குப் போட்டியிடுகின்ற தி. மு. கழக அபேட்சகரும், மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளருமான தோழர் எஸ். முத்து அவர்களை ஆதரித்து இன்று மாலை இங்கு தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் தலைமையில் ஒரு மாபெரும் ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஊர்வலத்தில் திரண்டு, எழுச்சிமிக்க ஆரவாரத்தோடு மதுரை நகரம் முழுதும் வலம் வந்தனர்.

இரவு 7 மணியளவில் திலகர் திடலில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டிருந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

தோழர் எஸ். முத்து அவர்களும், மற்றும் பல தோழர்களும் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிடுகின்ற அவசியத்தையும் காங்கிரசாரது சர்வாதிகாரப் போக்குகளையும் கம்யூனிஸ்டுகளின் வரட்டுவாதங்களையும் எடுத்து விளக்கியும் தி. மு. கழகம் எதிர்க்கட்சியாக விளங்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டியும் சொற்பொழிவாற்றினர். (ந-நி.)

சீர்காழியில் மாபெரும் ஊர்வலம்

கழக அபேட்சகர்களை ஆதரித்துப் பிரச்சாரம்

ஆயிரம் சைக்கிள்களில் கழக வீரர்கள் அணிவகுப்பு

3-3-57 பகல் 4 மணிக்கு சீர்காழி இரயில் நிலயத்திலிருந்து ஓர் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து, நகர் வீதிகள் முழுதும் சிறப்புடன் சுற்றி வந்தது.

தி. மு. கழக அபேட்சகர்கள் தோழர் கி. மனோகரன், வ. வீராசாமி, சி. ஜம்பு, பி. வேலாயுதம் ஆகியோர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். சுமார் 1,000 சைக்கிள்கள் கொண்ட அம்மாபெரும் ஊர்வலம் ½ மைல் நீளம் கொண்டிருந்தது.

சீர்காழி நகர் அன்று தி. மு. கழகக் கொள்கை முழக்கத்தால் அதிர்ந்தது.

மாலை 6 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தோழர் இரா. சத்தரு சிங்காரவேல் தலைமை தாங்கினர்.

தோழர்கள் கி. மனோகரன் வ. வீராசாமி, சி, ஜம்பு, பி. வேலாயுதம் ஆகியோர் பேசினர், (ந. நி.)

உலகிலேயே மிகவும் உயரமான கோபுரம்!

"மாஸ்கோ டெலிவிஷன் நிலைய கோபுரம் இப்பொழுது கட்டப்பட்டு வருகிறது; இதன் உயரம் சுமார் 3 பர்லாங்; உலகிலேயே இது மிகவும் உயரமான கோபுரமாக விளங்கும்," என்று செய்தி ஒன்று கூறுகிறது.

இலங்கைக் குடியுரிமை

ஒரு விளக்கம்

கொழும்பு, மார்ச் 5—

இலங்கையில் 1957 சனவரித் திங்களில் 2,864 இந்தியர்களுக்கு மட்டும் இலங்கைஅரசு குடியுரிமை வழங்கியுள்ளதாம். இதுவரையில் 58,000 இந்தியர்களுக்கு, இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

குடியுரிமை கோரியிருந்து 5-இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

மொத்தம் 8 இலட்சம் இந்தியர்கள் இலங்கைக் குடியுரிமை கோரி மனுச் செய்திருந்தனர்; இன்னும் 2½ இலட்சம் மனுக்களே முடிவு செய்யப்படவிருக்கின்றன.

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு	ரூ.	அ.	பை
2—3—57 இதழ்ப்படி	... 93,010	1	8
ஆரணி-சேவூர் அழகிரி மன்றம் ...	15	0	0
பம்பாய் இ. கோவிந்தன் ...	5	0	0
சத்திரவாடி தி. மு. கழகம்—பி. டி. தேசன் மூலம் : ...	25	0	0
சேலம்-சிங்கபுரம் தி. மு. கழகம் —இரா. அரங்கசாமி மூலம் : ...	15	0	0
பொன்னேரி-மீஞ்சூர் சி. பி. அ. ரகிமான் ...	5	8	0
குடியேற்றம்-பிச்சனூர் பகுத்தறிவு இளைஞர் மன்றம் ...	5	5	0
ஈரோடு-மன்னுத்தம்மன்பாளையம் எம். எம். முத்துசாமி ...	4	0	0
கல்லக்குடி ஐ. முத்துத்தம்பி ...	1	0	0
ஆமதாபாத் நகர தி. மு. கழகம் இரா. தணிகாசலம் மூலம் : ...	270	0	0
தஞ்சாவூர் ச. கருப்புச்சாமி ...	5	0	0
„ சே. பே. சேதுபதி ...	5	0	0
„ ப. சிங்காரம் ...	5	0	0
„ திருநள்ளாறு தி. மு. கழகம் ...	25	0	0
திருச்சி-திருக்களம்பூர் தி. மு. கழகம் —வி. வி. சுப்பையா மூலம் : ...	10	10	0
தாம்பரம் தி. மு. க. செ. அன்பரசன் மூலம் : ...	60	0	0
கள்ளிக்குளம் தி. மு. கழகம் ...	25	0	0
சென்னை ஆலந்தூர் தி. மு. கழகம் ...	41	0	0
பெல்லாரி மருத்துவ விடுதி எஸ். சிங்காரம் ...	2	0	0
நன்னிலம்-ஏனங்குடி தி. மு. கழகம் —மா. சம்பந்தம் மூலம் : ...	17	0	0
சாத்தான்குளம் தி. மு. கழகம்—இரா. நல்வினை ...	5	0	0
நன்கொடை மாலையாகக் காலணுக்கள் —எம். ஜி. ஆர். மூலம் : ...	6	7	6
கோட்டுச்சேரி அழகிரி மன்றம் ...	5	0	0
திருச்சி-குளித்தலை சுப்புரத்தினம் ...	3	0	0
சென்னை-குரோம்பேட்டை ச. விசயராகவலு ...	2	0	0
சைதை ஆசிரியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் ...	15	0	0
சென்னை பவழக்காரத் தெரு, ஏ. பழனியப்பன் ...	2	0	0
விசயபுரம் இரத்தினப்பிரகாசம் ...	1	0	0
பாலக்காட் பி. ஒ. சி. ரோடு, எம். ஏ. மஜீத் ...	1	0	0
திண்டிவனம் இராமவிலாசம் உணவு விடுதி ஊழியர்கள் ...	10	0	0
வ. ஆற்காடு-திருவத்திபுரம் ஜி. கபூர்கான் ...	2	0	0
இராமனுதபுரம்-கோகையூர் ‘தமிழகம்’ ...	3	7	0
செய்யார்-விண்ணமங்கலம் மேல்மட்டை தி. மு. கழகம் ...	10	0	0

ஆக மொத்தம் ரூ. **93,607-7-2**

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி :—

போதுச்செயலாளர்—தி. மு. கழகம்,
‘அறிவகம்’, இராயபுரம், சென்னை-13.

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு

பம்பாய் வாழ் தமிழ் மக்கள் காணிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் நிதிக்கென தமிழகத்திலுள்ள மக்கள் மட்டுமல்லாது, பல வெளிநாட்டுத் தோழர்கள் நிதி அனுப்பிவைத்துள்ளனர்; அப்படி அனுப்பியவர்களில் பம்பாய்வாழ் தமிழக அன்பர்களும் முன் வரிசையில் நிற்கின்றனர்.

இதுவரை தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காகப் பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுவின் சார்பில் மொத்தம் ரூ. **1,313—2—0** தரப்பட்டிருக்கிறது; இதில் இரண்டாவது தவணையாகத் தரப்பட்ட ரூ. **706—8—0**-க்கான விவரம் கீழே தரப்படுகிறது :

பம்பாய்—தாராவி தி. மு. க. ரூ. 332-6-0; சௌந்திரபாண்டியனூர் பகுத்தறிவு மன்றம் ரூ. 109-10-0; இரயில்வே தொழிலாளர்கள் (பி. எஸ். தங்கையா. ஓய். ஜோசப், குறுஞ்செழியன் மூலம்) ரூ. 72; சிகரெட் கம்பெனித் தொழிலாளர்கள் (சுப. குமார், எல். என். செழியன் மூலம்) ரூ. 72; நியூ ஏரா பேப்ரிக்ஸ் தொழிலாளர்கள் (சு. தே. இராசையா, வி. பி. முத்தையா, பெருமாள்தாசு மூலம்) ரூ. 34-8-0, ம. மாசானம் மூலம் ரூ. 27; பிரீமியர் ஆட்டோமோபைல்ஸ் தொழிலாளர்கள் (ஏ. என். வேலன் மூலம்) ரூ. 23; எம். எம். துரைபாண்டியன் மூலம் ரூ. 22; எஸ். செல்லையா மூலம் ரூ. 14.

இத்தொகையை வசூலிக்க ஒத்துழைப்புத் தந்த அமைப்புகள், நிறுவனங்கள், தனிப்பட்டோர் ஆகியோருக்கும், நிதிதந்துதவின கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவருக்கும் பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுவினரும், தி. மு. கழகத் தலைமை நிலையமும் தங்களது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இதனிடையில் மேலும் தாங்கள் தேர்தல் நிதி திரட்டிவருவதாயும், இதுவரை நிதி தாராதோர் கூடியவரையிலும் தங்களாளியன்றமட்டிலும் உதவுமாறும் பம்பாய் மத்தியக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

இந்திய ரயில்வேக்கள்

சில தகவல்கள்

புதுடில்லி, பிப். 28—

இந்திய இரயில்வேக்கள், 1955-56ம் ஆண்டில் சிப்பந்திகளின் சம்பள வகையில் பட்டுவாடா செய்த தொகை மொத்தம் ரூ. 148½ கோடிக்கும் அதிகமாகுமாம்! முந்திய ஆண்டில் பட்டுவாடா செய்யப்பட்ட தொகையைக் காட்டிலும் இது ரூ. 8-கோடி அதிகமாகுமாம். வேலை பார்த்துவந்த சிப்பந்திகளின் எண்ணிக்கையும், இவ்வருடத்தில் முதல் முதலாக 10 இலட்சத்திற்குமேல் உயர்ந்துவிட்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

1955—56ல் இந்திய இரயில்வேக்களின் மொத்தப் போக்குவரத்து வருமானம் ரூ.-316,29,00,000; அதில் ரூ.-107,71,00,000 பிரயாணிகளின் மூலமும், ரூ. 180,28,00,000 சரக்குகள் மூலமும், ரூ.-28,30,00,000 சில்லறை இனங்கள் மூலமும் கிடைத்தனவாம்!

எல்லா இரயில்வேக்களிலுமாக மொத்த மூலதனச் செலவு ரூ. 975,50,00,000 (போடப்பட்டுவரும் மார்க்கங்கள் உட்பட); முந்திய வருஷத்தில் அத்தொகை ரூ. 910,91,00,000-ஆக இருந்தது. மூலதனச் செலவில் ரூ. 968,98,00,000 இந்திய சர்க்கார் இரயில்வேக்கள் சம்பந்தப்பட்ட மூலதனப் பொறுப்பாகும். மீதி ரூ. 6,52,00,000 கம்பெனிகள், மாவட்ட போர்டுகள் முதலியவைகளின் மூலதனமாகும்.

இந்தியாவிலுள்ள எல்லா இரயில்வேக்களில் மொத்த மார்க்கங்கள் 34,736 மைல்; அதில் 34,182 மைல் சர்க்கார் நிர்வாகத்திலுள்ளது. மீதி 554-மைல் சர்க்கார் அல்லாத நிறுவனங்களின் நிர்வாகத்திலுள்ள சில்லறை இரயில்வேக்களின் தூரமாகும்.

10,27,162 சிப்பந்திகளுக்கு ரூ. 148,56,00,000

இந்திய இரயில்வேக்கள்தான் ஏராளமான ஊழியர்களை நியமித்திருக்கிறது. சர்க்கார் இரயில்வேக்களில் 1956மார்ச் 31-ந்தேதி 10,27,162 பேர் வேலையிலிருந்தார்கள்; 1955 மார்ச் 31-ந்தேதி (திருத்தப்பட்ட கணக்கு) 9,83,215 பேர் இருந்தார்கள்.

1955—56-ல் சர்க்கார் இரயில்வேக்களில் சிப்பந்திகளுக்குச் சம்பளம், படி, பிராவிடண்ட் நிதி, கிராட்டியுட்டி நன்கொடை முதலியவைகளாக மொத்தம் ரூ. 148,56,00,000 கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரயில்வே சிப்பந்திகளுக்காக பல ரகங்களிலும் மொத்தம் 8,645 குடியிருப்பு இடங்கள் கட்டப்பட்டனவாம்.

இந்திய இரயில்வேக்கள் இவ்வாண்டில் தினமும் சுமார் 35,50,000 பிரயாணிகளை ஏற்றிச்சென்றன—இந்த எண்ணிக்கை, இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவிகிதத்துக்குச் சற்றுக் குறைவாகும்.

இரவிலும் பகலிலும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் சராசரி 1,48,000 மக்கள் வீதம் இரயில் வண்டிகளில் ஏறிச்சென் சென்றனர். முந்திய ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டில் சுமார் 3,60,00,000 பேர் அதிகமாக இரயில் வண்டிகளில் பிரயாணம் செய்தனர்.

லால்குடி, திருச்சி வட்டாரங்களில் கே. ஏ. மதியழகன் சுற்றுப்பயணம்

2—3—57 காலை தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் திருச்சி வந்து சேர்ந்தார். திருச்சி மாவட்டத் தொகுதிகளின் தேர்தல் நிலைகளை சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்து பேசினார்.

பூவாளூர் :

2—3—57 இரவு 7 மணிக்கு லால்குடி தொகுதியில் போட்டியிடும் தோழர் அம்பில்-தர்மலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். தோழர் முத்தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார். தோழர் அம்பில்-தர்மலிங்கமும் பேசினார்.

புள்ளம்பாடி :

இரவு 9 மணிக்கு, புள்ளம்பாடியில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர் அம்பில்-தர்மலிங்கம் அவர்களை ஆதரித்து நடைபெற்றக் கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் பேசினார். கிராமப் பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

அம்பில் :

அம்பில் கிராமத்தில் இரவு 12 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் பேசினார். இரவு நடுநிசியாகியும் கூட்டத்தில் ஏராள மானவர்கள் கலந்துகொண்டது, தேர்தலில் அம்பில் மக்களுக்கு உள்ள ஆர்வத்தை எடுத்துக்காட்டியது. கூட்டத்தில் அம்பில் பொதுமக்கள் சார்பில் தோழர் தர்மலிங்கம் அவர்கள் தேர்தல் செலவுகளுக்கு தோழர்கள் மதியழகனிடம் ரூ. 500 கொண்ட பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

திருச்சி :

திருச்சி நகரில் இரவு 1 மணியளவில் சின்னசெட்டித் தெருவில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் திருச்சி பார்லிமெண்டு தொகுதியில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிடும் தோழர் எம். எஸ். மணி அவர்களை ஆதரித்துப் பேசினார். தோழர் பாண்டுரங்கன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். தோழர்கள் இராபி, நாகசுந்தரம், பரமசிவம், எம். எஸ். மணி ஆகியோரும் பேசினர். மாநில திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்பாளர் தோழர் டி. கே. பொன்னுவேலு அவர்களும் இந்த சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்டார்.

3—3—57 அதிகாலை தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் பொதுச்செயலாளர் போட்டியிடும் சேலம் தொகுதிக் கூட்டங்களில் கலந்துகொள்ள திருச்சியிலிருந்து புறப்பட்டார்.

எம். ஜி. இராமச்சந்திரன் சுற்றுப்பயணம்

★

தஞ்சை மாவட்டம் :

இரவு 9 மணிக்கு, தஞ்சாவூர் திடலில் தோழர் எஸ். பெத்தண்ணன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் இலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் கலந்துகொண்டதைக் கண்டு மனம் பொறுத சில மாற்றுக் கட்சியினர் குழப்பம் விளைவிக்க முயற்சித்தனர். என்றாலும், கழகத் தோழர்களின் ஒத்துழைப்புடன் போலீசார் அமைதியை நிலைநாட்டினர். பின்னர் தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில் இம்மாதிரி கூட்டங்களில் குழப்பங்களை விளைவிப்பதில் பயன் ஒன்றுமில்லை என்று மாற்றுரை எச்சரித்தும் நாட்டில் ஜனநாயகம் மிளிர, அறிவு வளர, நாட்டு உரிமையைக் காக்க தி. மு. கழகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினார். பல கிளைக் கழகங்கள் சார்பில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

பட்டுக்கோட்டை :

இரவு 11 மணிக்கு, தோழர் அருணசலம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தி. மு. கழகம் தேர்தலில் நிற்பதின் நோக்கம் குறித்தும் தி. மு. கழகத் தோழர்களை ஆதரிக்கவேண்டிய அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

மதுக்கூர், அதிராம்பட்டினம் :

மதுக்கூர் — துவரங்குறிச்சி, முக்கூட்டுச்சாலையிலும் அதிராம்பட்டினத்திலும் இரவு 12½ முதல் 2 மணி வரை நடைபெற்ற பொதுக்கூட்டங்களில்தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், என். எஸ். இளங்கோ, அ. பொன்னம்பலனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், பாப்பாநாடு, புல்லநாடு ஆகிய நாடுகளுக்கும் சென்று அங்கு தரப்பட்ட வரவேற்புகளைப் பெற்றுக்கொண்டு தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். இறுதியாக தஞ்சை, திருச்சி வழியாகப் புறப்பட்டு, 1-3-57 காலை 10 மணிக்கு சென்னை வந்தார்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி:

1-3-57 மாலை 6 மணி முதல் இரவு 11½ மணிவரை, ஆவடி, கவரப்பாளையம், பட்டாபிராம், தண்டுரை, தின்னனூர் திருமழிசை, பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர் கூட்டங்களில் கலந்துகொண்டார். தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, அ. பொன்னம்பலனார் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

தேர்தல் நிதி :

புரட்சி நடிகர் எம். ஜி, இராமச்சந்திரன் அவர்களது சுற்றுப் பயணத்தின்போது சில இடங்களில் தி. மு. கழகத் தேர்தல் நிதி தரப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் இங்கு தரப்படுகிறது.

பள்ளம்பட்டியில் குழந்தைகட்குப் பெயர் சூட்டினதுமூலம் ரூ. 6; சங்கரன்கோயிலில் பெயர் சூட்டல்மூலம் ரூ. 2; பண்ணைக்காட்டில் பெயர் சூட்டல்மூலம் ரூ. 5; உத்தமபாளையம் கூட்டத்தில் ரூ. 10; பண்ணைக்காடு, தஞ்சாவூரில் எம். ஜி. ஆர். அவர்களுக்கு அணிவிக்கப்பட்ட காலணா மாலைகளும் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென தரப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★

நாட்டின் தன்மானம் காக்க 5,000 வீரர்களை சிறைக்கனுப்பிய

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★

குலக் கல்வித் திட்டம் ஒழிய போராடிய

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★

நெசவாளர் துயர் துடைக்க பாடுபடும்

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★

புயலால் அவதிப்பட்டோருக்கு காணிக்கை தந்த

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

நேரு பண்டிதர்களது தமிழ்நாட்டுத் தாசர்களின் கவனத்திற்கு!

நேருவைக் காட்டி ஓட்டுக் கேட்ட இந்திராவுக்கு நேர்ந்த அவமானம்

'நேருவின் பெயரைச் சொல்லி ஓட்டுப் பிச்சை கேட்க வராதே; எங்களுக்கு மகா குசராத் வேண்டும்'—இவை போன்ற கோஷங்களை முழக்கிக்கொண்டு, இங்குள்ள மகாகுசராத் ஆர்ப்பாட்டக்காரர்களில் ஆண்களும் பெண்களுமாகப் பல்லாயிரக்கணக்கில் வழிநெடுகத் திரண்டிருந்து, அங்கு காங்கிரசுக்காக ஓட்டுக் கேட்கவந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் முகத்தில் கரியைப் பூசி அனுப்பியிருக்கின்றனர் என்று செய்தி ஒன்றின் மூலம் தெரியவருகிறது!

இந்திரா காந்தி அம்மையாருடன் குசராத் பிரதேசக் காங்கிரஸ் செயலாளரான தக்கூர்பாய் தேசாயும், மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களும் வந்தனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பல இடங்களில் மகா குசராத் ஆர்ப்பாட்டக்காரர்கள், திருமதி இந்திரா காந்தியும் மற்றவர்களும் ஏறிச் சென்ற கார்களை நிறுத்தி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட எத்தனித்திருக்கின்றனர்!

வேறொரு இடத்தில், இந்திரா அம்மையார் சென்ற காரைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்த காங்கிரஸ் தலைவர்கள் இருந்த கார்கள் மீது பழஞ் செருப்புகளும் கற்களும் வீசப்பட்டனவாம். சில ஆர்ப்பாட்டக்காரர்கள் காங்கிரஸ் தலைவர்களைத் தாக்கினதாகவும் தெரிகிறது.

தமிழகத் தேர்தல்கள்: முடிவுகள் பற்றிய விவரங்கள்

இத்திங்கள் 1-ந் தேதி நடைபெற்ற சட்டசபைத் தொகுதித் தேர்தல்களில் மேலும் சில இடங்களிலிருந்து முடிவுகள் தெரிந்துள்ளன.

ஒரு தனித் தொகுதி உட்பட அறிவிக்கப்பட்ட மொத்தம் 7 தொகுதிகளில் 5 இடங்களில் மட்டும் காங்கிரஸ் குறுகிய அளவு மெஜாரிட்டி ஓட்டுகள் பெற்றிருக்கிறது. மற்ற இரு இடங்களில் ஒன்றை காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகரும், இன்னொன்றை சுயேச்சை அபேட்சகரும் கைப்பற்றியிருக்கின்றனர். இந்த 7 தொகுதிகளில் 5 இடங்களில் மட்டும் தி. மு. கழக அபேட்சகர்கள் போட்டியிட்டனர்.

உடுமலைப்பேட்டைத் தொகுதியில் நமது அபேட்சகர் தோழர் கே. எ. மதியழகன் அவர்களுக்கு எதிராகப் போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகர் ஒருவர் சுமார் 8,000 வாக்குகள் மட்டும் அதிகம் பெற்றிருக்கிறார். தோல்வியடைந்த காங்கிரஸ் அபேட்சகர் ஒருவர் தோழர் மதியழகன் அவர்களைவிட சுமார் 4,000 வாக்குகளே அதிகம் பெற்றிருக்கிறார்.

மற்றும் அம்பாசமுத்திரம், காரைக்குடி, திருச்செந்தூர் (இரட்டைத் தொகுதி) ஆகிய 4 தொகுதிகளில், காங்கிரஸ் அபேட்சகர்கள் ஒருசில வாக்குகளை அதிகமாகப் பெற்று வெற்றி அடைந்தனர்.

கழக அபேட்சகர்கள் போட்டியிடாத தொகுதிகள் தவிர்த்த மற்றத் தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி அடைந்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

காசா பகுதியில் ஐ. நா. படை!

எல்பெல்லா, மார்ச் 5—

இன்னும் 24 மணி நேரத்திற்குள்ளாக ஐ. நா. அவசரகாலப் படை காசா பிரதேசத்திற்குள் பிரவேசிக்கும் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த ஐ. நா. பாதுகாப்புப் படையில் பங்கு வகிக்கும் இந்தியத் துருப்புகள், காசாவின் மத்தியப் பகுதிக்கு அனுப்பப்படுவர் என்று தெரியவருகிறது.

சண்டித்தனம்!

எகிப்திலிருந்து இன்னும் இஸ்ரேல் தனது துருப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளாதது குறித்தும், உடனடியாக இஸ்ரேல் துருப்புகள் திரும்பப்பெறப் படவேண்டிய அவசியம் பற்றியும் ஐ. நா. அவசர காலப் படைத் தளபதியான இ. எல். எம். பர்ன்ஸ்—இஸ்ரேல் துருப்புகளின் தலைவர் மோஷே டாயன் ஆகியோரிடையே நடைபெற்ற 75 நிமிடப் பேச்சு வார்த்தைகளில் ஒரு முடிவெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எகிப்திலுள்ள காசா எல்லையிலிருந்து தமது துருப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வது குறித்து, வாஷிங்டனிலிருந்து தமக்குக் கிடைத்த சில தகவல்களையொட்டி, ஐ. நா. அவசர படைத் தலைவருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒரு முடிவு காணுமாறு தமது படை அதிபருக்கு இஸ்ரேல் பிரதமர் பென்குரியன் உத்திரவிட்டதைத் தொடர்ந்தே இந்தப் பேச்சு வார்த்தை நடைபெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. காசாவின் எதிர்காலம் குறித்து வாஷிங்டனிலிருந்து தமக்குக் கிடைத்த சில 'தகவல்'கள் தமக்கு திருப்தி அளிப்பதாகத் தெரிந்ததாலேயே பென்குரியன் இந்த முடிவிற்கு வந்தார் என்றும் தெரிகிறது.

நாகரீக நாட்டில் இந்த விசித்திரம்!

கொலம்பியா, மார்ச் 4—

பொது போக்குவரத்துச் சாதனங்களில் பிரயாணம் செய்யும் ஒரு பெண்மணியின் பக்கத்தில் உட்காருவதற்கு அந்தப் பெண்மணியின் சம்மதத்தைப்பெற வேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றுவதற்காக தீவிர முயற்சிகள் நடைபெற்று வருகின்றனவாம்!

இந்தச் சட்டத்தின் நோக்கம், நீக்கிரோக்கள் வெள்ளை மாதர்கள் அருகில் உட்காருவதைத் தடுப்பதேயாகுமாம்!

மறைவு

'திராவிட நாடு' துணை ஆசிரியர் தோழர் இராம-அரங்கண்ணல் அவர்களின் பாட்டியார் கோவிந்தம்மாள் அவர்கள் சில நாட்கள் உடல் நலமில்லாதிருந்து, 3—3—57-ல் இயற்கை எய்தினார்கள் என்ற சேதி கேட்டு மிக்க வருந்துகிறோம். அவரது பிரிவால் வருந்தும் அவருடைய உற்றார் உறவினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

—ஆ-ர்.

தேர்தல் கூட்டம்

★

பார்க் டவுன்:

6—3—57 இரவு 8 மணிக்கு சென்னை—பார்க் டவுன் இராசப்பச் செட்டித் தெரு அருகில், 28-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தேர்தல் கூட்டம் நடைபெறும். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, தோழர்கள் க. அன்பழகன், பி. எம். கருணாகரன் (தெலுங்கில்), அறிவுடை நம்பி ஆகியோர் பேசுவர்.

வண்ணை இளங்கோ கலைமன்ற தேர்தல் ஊழியர் கூட்டம்

6—3—57 இரவு 9 மணிக்கு சென்னை—வண்ணை இளங்கோ கலை மன்றப் பணிமனையில் தேர்தல் ஊழியர் கூட்டம் நடைபெறும். 1-லிருந்து 10 வரையுள்ள நா. நா. தோட்ட சந்து, லாயர் சின்னத்தம்பி 1, 2 சந்து, நமசிவாய செட்டி சந்து, ஜாண்டர பிள்ளையார் கோவில் தெரு ஆகிய தெருக்களிலுள்ள தி. மு. கழக ஊழியர்களும் தொண்டர்களும் தவறாமல் வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

'தினமணி'க்கு மறுப்பு

★

"3—3—57 'தினமணி' காலைப் பதிப்பில், 'வாணியம்பாடியில் லீக் தலைவருக்குக் கருப்புக் கொடி; தி. மு. கழக அபேட்சகரை ஆதரிப்பதற்கு முஸ்லிம்கள் ஆட்சேபம்' என்ற தலைப்பிட்டு ஒரு செய்தி பிரசுரமாகியிருக்கிறது. அதில் ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் கருப்புக்கொடிகளுடன் 'இஸ்மாயில் திரும்பிப்போ' என்று கோஷமெழுப்பினதாகவும் முஸ்லிம் லீக் தி. மு. கழக அபேட்சகரை ஆதரிப்பதை ஆட்சேபித்து இவ்வூர் முஸ்லிம்கள், இஸ்மாயில் இரயிலிலிருந்து இறங்கியபோது ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும், பெரும்பாலான முஸ்லிம்கள் காங்கிரஸ் சார்பில் நிற்கும் எ. எ. ரஷீதை ஆதரிக்கின்றார்களென்றும் ஒரு செய்தி பிரசுரமாகியிருக்கிறது.

"தி. மு. கழக அபேட்சகர் தோழர் எம். பி. வடிவேலுவை ஆதரிக்க இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள அவர் வந்தபோது, சில சிறுவர்கள் கருப்புக்கொடி காட்டினதைத்தான் ஆயிரக் கணக்கானவர்கள் என்று வழக்கம்போல திரித்து பிரசுரித்திருக்கிறது. நேற்று இரவு பாலாற்றில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்துகொண்டு, 'எங்கள் ஓட்டு உதய சூரியன் பெட்டிக்கே' என்று விண்ணதிர முழங்கினர். 'தினமணி'யின் செய்தியைக் கண்டு மக்கள் எள்ளி நகையாடுகின்றனர்.

அன்பன்
முல்லை-சத்தி

தரக்குறைவான நிலக்கரியைப் பயன்படுத்தத் திட்டம்

மூன்று தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படுமாம்

ஐதராபாத், மார்ச் 5—

இந்தியாவில் கிடைக்கும் தரக்குறைவான நிலக்கரியை வீட்டு உபயோகத்திற்குப் பயன்படும் வகையில் மாற்றுவதற்கு மூன்று புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கான திட்டம் ஒன்றை மத்திய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

ஐதராபாத்தில் கோத்தகூடம் என்ற இடத்திலும், பீகாரில் உள்ள இராணிகஞ்சிலும், சென்னையில் நெய்வேலியிலும் இந்தத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படுமாம்.

'மிரட்டல் உருட்டல்களால் பயந்து ஓடுவோர் நாங்களல்ல'

'உயிருள்ளவரை லட்சியத்திற்காக உழைத்தே தீருவோம்'

காலித்தனங்களில் ஈடுபட்டுள்ள மாற்றாருக்கு புரட்சிநடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் எச்சரிக்கை

சேலம், மார்ச் 5—

"கற்களால் அடித்து, எங்களையும் தி. மு. கழகத்தையும் ஒழித்துவிட முடியாது. எதையும் தாங்கும் இதயத்துடன் உயிர்போகும்வரை உயர்ந்த இலட்சியத்திற்காக நாங்கள் பணியாற்றுவோம். தூற்றுதல், மிரட்டுதல், காலித்தனம் ஆகியவைகளுக்குப் பயந்து நாங்கள் ஓடிவிடமாட்டோம். எங்கள்மீது வீசிய 5, 6 கற்களும் தேர்தலில் எங்களுக்கு 5, 6 ஆயிரம் ஓட்டுகளை மேலும் மக்கள் போட்டு வெற்றித் தேடித் தரத்தான்போகின்றனர் என்பதை மாற்றுக் கட்சித் தோழர்கட்குக் கூறவிரும்புகிறேன். கற்கள் வீசும் இழி செயல்களில் ஈடுபட வேண்டாம்; இந்த முறையினால் பொதுமக்கள் பாதிக்கும்படியான நிலையைஉருவாக்க வேண்டாம். வெறியினால் ஆத்திரத்தினாலும் பொறாமையினாலும் வெறிச் செயல்களில் ஈடுபடாதீர்கள்,"

என்று, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கடந்த 3-ந் தேதியன்று சேலம் குனகயில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஊர்வலம்

காஞ்சிப் பயணத்தை முடித்துக்கொண்டு தோழர் எம். ஜி. ஆர். அவர்களும், தோழர்களும் சேலம் குனை வந்தடைந்ததும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், புரட்சி நடிகர் இராமச்சந்திரன் அவர்களும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வர ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதுபோது, இதனைக் காணப் பொறாத மாற்றுக்கட்சித் தோழர்கள் சிலர், ஊர்வலத்தில் 5, 6 முறை கற்களை வீசி கலைக்க முயற்சித்துத் தோல்வியடைந்தனர்.

பின்னர், அங்கு நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் பேசுகையிலே தோழர் எம். ஜி. ஆர். அவர்கள், மாற்றுக் கட்சியினரின் இத்தகைய அநாகரீகச் செயல்களை மக்களுக்கு எடுத்துக் கூறி மாற்றாருக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

எம். ஜி. ராமச்சந்திரன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சேலம் மாவட்டத்தில்

4—3—57 காலை 10 மணிக்கு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தோழர்கள் சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார் ஆகியோருடன் சேலத்தைவிட்டுப் புறப்பட்டு, மஞ்சிவாடி, புதுப்பட்டி, கூட்டு ரோடு, கோபிநாதம்பட்டி, சின்னக்குப்பம், அரூர், ஊத்தங்கரை சிங்காரப்பேட்டை, மிட்டான் பள்ளி, பரகூர், கந்திரி, ஆகிய ஊர்களில் நடைபெற்ற பொதுக் கூட்டங்கள், மற்றும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பின்னர் இரவு $7\frac{1}{2}$ மணிக்கு திருப்பத்தூரில், 9 மணிக்கு வாணியம்பாடியிலும், 12 மணிக்கு வேலூரிலும் நடைபெற்றப் பொதுக்கூட்டங்களிலும் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சிகளில் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களும் கலந்துகொண்டார். பின்னர் 5-3-57 காலை 4 மணிக்குக் காஞ்சிபுரம்வழியாகச்சென்னை வந்தார்.

புரட்சி நடிகர் தமது தோழர்களுடன் சென்ற இடங்களிலெல்லாம், மக்கள் அவரை அன்புடன் வரவேற்று மலர் மாலைகள் சூட்டி, தி. மு. கழகத்திற்குப் போதாவு தருவதாக வாக்களித்தனர்.

அண்ணு தொகுதியில்!

புரட்சி நடிகர் அவர்கள், அண்ணு அவர்களது காஞ்சித் தொகுதி சுற்றுப் பயணத்தின் போது ஒலிமுகமதுபேட்டை, பாலசெட்டிச் சத்திரம், திருப்புக்குழி, தாமல், மீசராவாக்கம், கோவிந்தவாடி அகரம், பரந்தூர் ஆகிய இடங்களில் வீடு வீடாகச் சென்று அண்ணு அவர்களை ஆதரித்து உதயசூரியன் பெட்டியில் ஓட்டுப் போடுமாறு கேட்டுக் கொண்டார். ஆங்காங்கு நடைபெற்றப் பொதுக்கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றினார். அன்று இரவு $7\frac{1}{2}$ முதல் $12\frac{1}{2}$வரை காஞ்சியில் நடைபெற்ற இரண்டு பொதுக்கூட்டங்களிலும் தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்.

ஆசிரியருக்குக் கடிதம்:

சர்க்கார் கவனிப்பார்களா?

ஐயா,

சேலம் மாவட்டத்தில் உதனப்பள்ளி தொகுதியில் தேர்தல் வேலைகளுக்காக நாமக்கல் தாலுகா வரகூர் ஏரியாவில் உள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அத்தகைய நியமன உத்தரவு மேற்படி தொகுதி தேர்தல் அதிகாரியினால் போடப்பட்டது. ஆனால் அந்த உத்தரவைக் கொண்டுவந்த மற்ற அதிகாரிகள் அந்த ஆசிரியர்களை அனுப்ப ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக வேறு ஆசிரியர்களை நியமித்து விட்டுச் சென்றுள்ளார்கள். இத்தகைய போக்கைக் கண்டு இங்குள்ள ஆசிரியர்கள் மிகவும் வருந்துகின்றனர். இதை மேலதிகாரிகள் பரிசீலனை செய்து தவறுக்குக் காரணமானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், இதர தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை இம்மாதிரி காரணமின்றி திடீரென்று மாறுதல் செய்யாதிருக்கும்படியும் சர்க்காரை வேண்டிக்கொள்கிறேன்.

வி. இராமசாமி,
செயலாளர், சேலம் மாவட்ட ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கம்

சென்னை மாநிலத்திற்கு மண்பாண்ட உற்பத்தி மாதிரி நிலையமாம்!

மண்பாண்டம் உற்பத்திசெய்ய மூன்று மாதிரி நிலையங்கள் நிறுவ அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறதென்றும், இதற்கு ரூ. 20,200 செலவிடப்படுமென்றும் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.